பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

வார்ப்பு, பிளாஸ்ரிக், அல்மேனியம், எனமல் ஷெரமிக் பான்ஸி குட்ஸ் பொருள்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

ராஜா ரேட் சென்ரர்
3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ2/50

★ வாளிகள்
★ கிடாரங்கள்
★ சட்டிகள்
★ கூடைகள்
★ பாக்ஸ்
★ பாத்திரவகைகளையும்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

RAJAH
Trade Centre
3, Stanley Road,
JAFFNA.

சுடர்: 4 சுக்கில ஆண்டு வைகாசி மீ 18 உ புதன்கிழமை 25 ஹிஜ்ரி 1409 ஷவ்வால் பிறை (31 - 05 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-149

# பிரான்ஸிலிருந்து தமிழரை அனுப்பாதிருக்கச் சிபார்சு

## பொருளாதார உதவித் திட்டத்தை முதலில் இங்கு ஆரம்பிக்க யோசனை

யாழ்ப்பாணம், மே 31

அகதிகள் அந்தஸ்துக் கோரி, பிரான்ஸ் நாட்டில் தஞ்சம் புகுந்துள்ள சுமார் அறுபதினாயிரம் இலங்கைத் தமிழர்களை திருப்பி அனுப்பக்கூடாது.

அவர்களுக்கு உதவக் கூடிய பொருளாதாரத் திட்டங்களை வடக்கு - கிழக்கில் பிரெஞ்சு அரசு சார்பில் முதலில் ஆரம்பிக்க வேண்டும், அதன் பின்னரே அவர்களைக் கட்டம் கட்டமாகத் திருப்பி அனுப்புதல் வேண்டும்.

இவ்வாறு பிரெஞ்சு அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்யப்பட்டிருப்பதாக அறிய வந்திருக்கிறது.

பிரான்ஸ் நாட்டில் இருந்து யாழ்ப்பாணம் வந்து ஆய்வும், மதிப்பீடும் நடத்திய திரு ஜெராட் ருேபேட்சன் என்பவரே பிரான்ஸ் நாட்டுக்கு சிபார்சு செய்துள்ளதாக அறியவந்துள்ளது.

யாழ்ப்பாணத்துக்குக் கடந்த பெப்ரவரி மாதம் விஜயம் செய்திருந்த திரு. ருேபேட்சன் பிரான்ஸ் நாட்டில் அகதி அந்தஸ்துக்கோரியுள்ளவர்களின் குடும்பங்கள் சிலவற்றை இங்கு சந்தித்துப் பேச்சு நடத்தியதுடன், அவர்களின் பொருளாதார நிலைமை, நாட்டின் பொருளாதார நிலைமை ஆகியவிடயங்கள் குறித்து ஒரு மாத காலமாக ஆய்வு நடத்திவிட்டுத் திரும்பினுர்.

பிரெஞ்சு நலன்புரி அமைப்பைச் சேர்ந்த திரு. ருேபேட்சன் அரசுக்கு செய்துள்ள சிபார்சில் பின்வருமாறு தெரிவித்துள்ளார் என்று அறிய வந்துள்ளது:—

பிரான்ஸில் 60 ஆயிரம் இலங்கைத் தமிழர் உள்ளனர். அவர்களில் 90 வீதமானவர்கள் அகதி அந்தஸ்தில் உள்ளவர்கள். அவர்கள் இங்கு திருப்பி அனுப்பப்பட்டால் பெரும் பொருளாதாரக் கஷ்டங்களுக்குள்ளாவார்கள். ஆகவே அவர்களுக்கு இங்கு உதவக்கூடிய பொருளாதாரத் திட்டம் ஒன்றைப் பிரான்ஸ்

(6ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



சுவீப் விற்கிறது இரண்டாவது உழைப்பு என்டு சொல்ல வெட்கப்பட்டுத்தான் ஜனசக்தியைச் சாட்டுகினமோ என்னவோ......!

## நீர்வேலிப் பகுதியில் நேற்று துப்பாக்கிச் சூடு!

### ஒரே குடும்பத்தில் இருவர் பலி!!

யாழ்ப்பாணம், மே 30

நீர்வேலிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் பெண் ஒருவர் உட்பட இருவர் கொலையுண்டனர். இருவர் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை இராச வீதி, மாசுவன் வீதிச் சந்தியில் இச் சம்பவம் இடம்பெற்றது.

ஓடியதாகச் சொல்லப்படும் இளைஞர்கள் சிலர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அதிலிருந்து அவர்கள் தப்பிச் சென்று விட்டதாகவும் தெரிய வருகிறது.

எனினும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்த இடத்திற்கு அருகிலுள்ள வீட்டில் இருந்தவர்கள் மீது சூடுகள் விழுந்தன என்றும் சொல்லப்பட்டது.

இதனுல் வாலாம்பிகை தங்கவடிவேல் (வயது 28) என்ற பெண்ணும் அவரது சகோதரனும் கோப்பாய் ஆஸ்பத்திரி ஊழியருமான நாகரத்தினம் பூபாலசிங்கம் (வயது 29)

(6-ஆம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலியில் காலையில் நடந்த மோதல்

திருநெல்வேலிப் பகுதியில் நேற்றுக்காலை மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாக அறியவந்தது.

அமைதிப் படையினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலேயே பிரஸ்தாப மோதல் சம்பவம் இடம்பெற்றதாகப் பின்னர் அறியவந்தது.

சம்பவம் திருநெல்வேலி விவசாய கல்லூரிக்கு அண்மையில் நடைபெற்றது.

ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த அமைதிப் படை வாகனம் ஒன்றின் மீது காலை சுமார் 11 மணியளவில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாம்.

தாக்குதலை அடுத்து அமைதிப் படையினர் இந்த பகுதியை சுற்றி வளைத்தனர் என்றும் பலர் தாக்குதல்களுக்கு ஆளாகினர் என்றும் சொல்லப்பட்டது.

திருநெல்வேலி சந்தியில் இருந்து சம்பவம் நடந்த இடத்திற்கு சென்ற அமைதிப் படையினர் வழி நெடுகிலும் துப்பாக்கி வேட்டுகளை தீர்த்தபடியே சென்றனர் என்றும் அறியவந்தது.

## 3 நாட்கள் மட்டுமே "பாஸ்"கள்

வாகனங்களுக்கான 'பாஸ்' வழங்கும் வேலைகள் இனிமேல் வாரத்தில் 3 நாட்கள் மட்டுமே நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

'பாஸ்'கள் யாழ். செயலகத்தில் வைத்தே வழங்கப்படுமாம்.

திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களிலேயே வாகனப் பாஸ்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## சுவீப் விற்கும் பொலீஸார்!

நுவரெலியா, மே. 31

நம்பினுல் நம்புங்கள்!

ஸ்ரீலங்கா பொலீஸார் இப்பொழுது சுவீப் டிக்கெட் விற்பனையில் இறங்கிவிட்டார்கள்! ஓய்வு நேரத்தில் அல்ல, கடமை நேரத்தில். அதுவும் சீருடை அணிந்தவாறே அந்த உழைப்பிலும் ஈடுபடுகிறுர்கள்.

என்ன ஆச்சரியப்படுகிறீர்களா? பொலீஸாரின் சுவீப் விற்பனை நடப்பது இங்கே [வடபகுதியில்] அல்ல நுவரெலியா மாவட்டத்தில் தான்!

ஏராளமான ''மஹஜன சம்பத்த'' சுவீப்டிக்கெட்டுகளை இவர்கள் கொண்டு திரிகின்றுர்கள். வழியில் எதிர்ப்படுகின்றவர்களிடம் வாகனங்களை நிறுத்தி டிக்கெட்டுகளை விற்கின்றுர்கள்.

வாகன போக்குவரத்தைக் கவனிக்கும் பொலீஸாரும் - லைசென்ஸ் இல்லாமல் வாகனங்களை செலுத்தியவர்கள் — போக்குவரத்து விதிகளை மீறியவர்களை மடக்கி பத்து அல்லது பதினைந்து டிக்கெட்டுகளை மிகச் சுலபமாக விற்று விடுகின்றுர்கள்.

விசாரித்துப் பார்த்ததில் ''ஜனசக்தி'' திட்டத்திற்கு நிதியாக மஹாஜன சம்பத்த சுவீப் பணம் செல்வதனுல் தாம் ஒரு குறிப்பிட்ட அளவு டிக்கெட்டுகளை கட்டாயமாக விற்கும்படி பணிக்கப்பட்டுள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-58)

## அக்கரைப்பற்றில் வர்த்தகர்கள் ஐவர் கொலை

யாழ்ப்பாணம், மே 31

கிழக்கு மாகாணத்தில் ஐந்து முஸ்லிம் வர்த்தகர்கள் நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று அறியவந்தது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்றுப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

இந்தக் கொலைகளைக் கண்டித்து நேற்று கிழக்கு மாகாண முஸ்லிம்கள் தமது வீடுகளில் வெள்ளைக் கொடிகளைக் கட்டி தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர் என்று இங்கு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (அ-9)

## மாணவன் விவரத்தை அறிவிக்கக் கோரி வலி. கிழக்கில் பகிஷ்கரிப்பு

அச்சுவேலி, மே 31

இம்மாத மத்தியில் நடந்த புத்தூர் ஆவரங்கால் தேடுதல்களின்போது கைதுசெய்யப்பட்ட புத்தூர் சோமாஸ்கந்தக்கல்லூரி மாணவன் கதிரேசு உதயநாதசிவம் பற்றிய விவரத்தை அறிவிக்குமாறு கோரி வலிகாமம் கிழக்குப் பிரதேச மாணவர்கள் பாடசாலைகளைப் பகிஷ்கரிக்கின்றனர்.

பாடசாலைப் பகிஷ்கரிப்பு செவ்வாய்க்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமைவரை நடைபெறும் என்றும் அதைத் தொடர்ந்து அடுத்த நடவடிக்கைகள்பற்றி ஆராயப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆவரங்கால் கதிரேசு உதயநாதசிவம் புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியின் விஞ்ஞானப் பிரிவு மாணவன். விஞ்ஞான மாணவர்மன்றத் தலை

[6ஆம் பக்கம் பார்க்க]

## ஜே. வி. பி. - அரசு பேச்சுக்கு அதிக சாத்தியம்!

கொழும்பு, மே 31

மக்கள் விடுதலை முன்னணியினரும், (ஜே. வி. பி.) அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தக் கூடிய சாத்தியங்கள் அதிகரித்து வருவதாக கொழும்பில் அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இலங்கை அரசு நடத்தி வரும் பேச்சுக்கள் வெற்றியளிக்கும் பட்சத்தில் —

இலங்கை அரசுடன் பேச்சுக்களை நடத்த ஜே. வி. பியும் முன்வரும் என்று நம்பப்படுவதாக—

ஏ. எப். பி. செய்தி ஸ்தாபனம் நேற்று அறிவித்தது.

### ஈ. என். டி. எல். எவ். அழைப்பை அடுத்து

## யாழ். குடாநாடு முழுவதிலும் நேற்று ஹர்த்தால்

யாழ்ப்பாணம், மே 31

யாழ் குடாநாட்டில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனுல் குடாநாடு எங்கும் முழு அளவில் ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

வடக்கு, கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், ஈழதேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் உறுப்பினருமான திரு. எஸ். சிவபாலராஜாவை விடுதலை செய்யக் கோரி அம் முன்னணி ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தது தெரிந்ததே.

நேற்று கடைகள் பூட்டப்பட்டிருந்தன. பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்கவில்லை. வ. பி.போ.ச. பஸ்களும், தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபடவில்லை. அரசாங்க செயலகம்,

(6ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா, மட்டக்களப்பிலும்

வவுனியா, மே 31

வவுனியாவிலும் நேற்று ஹர்த்தால் இடம்பெற்றது. நகரம் முற்ருக ஸ்தம்பித்திருந்தது.

அரசாங்க அலுவலகங்கள் இயங்கவில்லை. பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் மாணவர்கள் செல்லவில்லை. கடைகள் பூட்டப்பட்டிருந்தன.

காலையில் மட்டும் கொழும்பிலிருந்து வந்த வாகனங்கள் வவுனியாவைக் கடந்து செல்ல அனுமதிக்கப்பட்டன. பின்னர் வெளியூர் வாகனங்களும் அனுமதிக்கப்படவில்லை. உள்ளூர் போக்குவரத்துச் சேவைகள் நடக்கவில்லை. ரயில் சேவைகள் அனுராதபுரம் வரை மட்டுமே நடைபெற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

31 — 05 — 1989
வைகாசி — 18
புதன்கிழமை

சுபநேரம்:
04. 22 முதல் 05 52 வரை
ராகுகாலம்:
11.52 முதல் 01.22 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
ஏகாதசி விரதம்

## பாணந்துறை நகரசபைத் தலைவி சுட்டுக்கொலை

கொழும்பு, மே 31

பாணந்துறை நகரசபைத் தலைவி நேற்று இனந்தெரியாத நபர்களினுல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதற்கு முன்னர் அவரது வீடு தீக்கிரையாக்கப்பட்டது.

## சீனவில் மாணவ தலைவர்கள் மூவர் கைது

பீகிங், மே 30

சீனுவில் மாணவர் அமைத்துள்ள தொழிலாளர் சங்கத்தின் மூன்று தலைவர்களை சீனப் பொலீஸார் நேற்றுக் கைது செய்தனர்.

கூடுதல் ஜனநாயக உரிமை கோரி நடத்தப்படும் மாணவர் போராட்டத்தின் ஒரு கட்டமாக இத் தொழிற்சங்கம் அமைக்கப்பட்டது. (ஒ-எ)

## கரம்பொன் வேளாங்கண்ணி திருவிழா

யாழ்ப்பாணம், மே 31

கரம்பொன் அன்னைவேளாங்கண்ணி யாத்திரைத்தல திருவிழாவில் இன்று 31 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு யாழ் ஆயர் அவர்களின் கூட்டுத் திருப்பலியாக திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

தினமும் மாலை 5 மணிக்குத் திருச்செபமாலையும் மறையுரைகளும் திருப்பலியும் இடம் பெற்றன. (இ)

## கிரனேட் வெடித்தது!

காங்கேசன்துறை, மே 31

மாவிட்டபுரம் அமைதிப் படை முகாம் அருகே திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் கிரனேட் ஒன்று வெடித்தது. எந்தவித சேதமும் ஏற்படவில்லை எனினும் கடைகள் உடனே மூடப்பட்டன. மக்கள் அவ்விடத்தை விட்டகன்றனர். (ஒ-68)

## தொண்டமானறு பிரசைகள் குழு உறுப்பினர் கடத்தப்பட்டார்

வடமராட்சி, மே 31

தொண்டமானுறுபிரசைகள் குழு உறுப்பினர் ஒருவர் தெல்லிப்பளையில் வைத்துக் கடத்தப்பட்டார்.

கடத்திச் செல்லப்பட்ட உறுப்பினர் எஸ். சிவகுமார் (வயது 45) எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை கடத்தப்பட்ட திரு. சிவகுமார் தொடர்பாக அவரது குடும்பத்தினர் வல்வைப் பிரசை

(6ஆம் பக்கம் பார்க்க)

## விவாக சுபமுகூர்த்தம்

மணமகன்:
செல்வன் ச. பூர்ணுனந்த சர்மா
மணமகள்:
செல்வி ச. ரஞ்சனு

காலம்: 01 - 06 - 1989 வியாழக்கிழமை
காலை 9 00 மணி முதல் 10.28 வரை
இடம்: சொக்கர் வளவு சோதி விநாயகர் ஆலய மண்டபம், குப்பிளான்.

★ தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. திருமதி
ச.கருணுனந்த சர்மா
''மூத்த விநாயகர் கோவிலடி''
ஆனைக்கோட்டை.

திரு. திருமதி
ந. சபாரத்தினக்குருக்கள்
''சொக்கர் வளவு சோதி விநாயகர் ஆலயம்''
குப்பிளான்.

[671]

இளையதலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

முந்திரிகைத் தோட்டத்திற்கான (கல்வனைஸ்) இழுவைக் கம்பிகள், தூண்கள் (சீமெந்து), நல் இன பால்பசுக் கன்றுகள் விற்பனைக்கு. தொடர்பு: வைகை ரெச்ஸரையில், பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி. (11102)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Dekalb) பிறவுண் சேவற் குஞ்சுகள் 31ஆம், 1ஆம், 2ஆம் திகதிகளில் விநியோகிக்கப்படும். (50 குஞ்சுகளுக்குமேல் எடுப்பவர்களுக்கு விலை ரூ. 3. 50) இல 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) (589)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hisex, Golden comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், Hyline வெள்ளை, கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், Hybro புரொயிலர் குஞ்சுகள் கறுப்பு சேவற் குஞ்சுகள் முன்கூட்டியே பதிவுசெய்து ஒவ்வொரு வாரமும் பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா & பிரதர்ஸ், பிரம்படிலேன், கொக்குவில். [549]

### மலிவு விற்பனை

விற்பனைக்கு பலவகையான பாம்ஸ் குரோட்டன்ஸ் சாடியுடன் 1. 6. 89 இல் இருந்து 15- 06- 89 வரை விற்கப்படும். சிதம்பரத்தை அஸ்பரகாஸ், எக்ஸ்சோரு பிறைட் ஒவ் யப்பான் என்பவையும் பொலித்தீன் பைகளில் விற்பனைக்கு உண்டு. பிளான்ட் பரைடைஸ் நேசரி, 152/2 கோவில் வீதி, யாழ்ப்பாணம் (11098)

### NEW CITY TRADERS

Daytron T. V 12'', 14'' B & W 14'', 20'' கலர் Phillips 20'' Gas cooker, Hotplate, Booster, T. V Antennas Pipe fan& றேடியோ வீடியோ கசெற் ரெக்கோடர்: ஓடியோ வீடியோ கசெற், Head, T.V stand, Film roll சுவர், கை மணிக்கூடுகள் மற்றும் ஆடம்பரப் பொருள்களுக்கும் New City Traders 135, Kasturiar Road, Jaffna. [சி/2505]

### தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு கம்பனிக்கு வெளிக்கள உத்தியோகத்தர் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் 532, C/o உதயன். (599)

### Wanted - Nurses

With theatre and Maternity training Starting Salary Rs 1700/- Per month. Central Nursing Home, Thirunelvely. [11095]

### தவறிவிட்டது

இராமையா ராசு 652232035X இலக்கம் கொண்ட அடையாள அட்டை தவறிவிட்டது. எடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (703)

### புலமைப் பரிசில் பரீட்சை

5ஆம் ஆண்டிற்கான புலமைப்பரிசில் மாதிரிப்பரீட்சை 03. 06. 89சனி, 3. 00மணிக்கு (தமிழ், கணிதம்) நடைபெறும் விண்ணப்பங்களைப் பதிவுசெய்யவும். ஆண்டு 3, முதல் ஆண்டு 11வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. புதிய கல்விநிலையம், கெங்காதரன் ஆஸ்பத்திரியடி, யாழ்ப்பாணம். (702)

### வீடு வாடகைக்கு

கச்சேரியடியில் கண்டி வீதியில் புகையிரதக் கடவைக்கு அருகாமையில் சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்கு உள்ளது. 31- 5- 1989, 1- 06- 89 இல் பகல் 3. 00 மணியிலிருந்து 5. 00 மணி வரை. இலக்கம் 158 ஆஸ்பத்திரி வீதி, பெரியகடையில் விபரங்களை அறிந்து கொள்ளலாம். (11100)

### றேனியோ

றேனியோ தட்டச்சு மற்றும் சகல அச்சு வேலைகளும் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொள்ள: தயா அச்சகம், 138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம், (மனோசரா சந்தி (சி/2359)

## தமிழ்த் தினமும் மதியபோசனமும்

நல்லூர் சென்பெனடிக்ற் றோமன கத்தோலிக்க வித்தியாலய தமிழ்த்தினவிழா அதிபர் அருட்செல்வி எம். லைசா தலைமையில் அண்மையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பேச்சு, பாட்டு, வாசிப்பு, உறுப்பெழுத்து, நாடகம் போன்ற சிறப்பம்சங்கள் இடம்பெற்றன.

தமிழ்த்தினவிழா முடிவில் மதிய உணவு விநியோகம் ஆரம்பமானது.

திருமறை பொதுநிலையினர் கழக உபதலைவரும்; ஆசீர்வாதப்பர் ஆலயச் செயலாளருமான திரு. ஜனம் பிரான்ஸிஸ் அதனை ஆரம்பித்துவைத்தார். முட்டை, பருப்பு சேர்ந்த பாண் வழங்கப்பட்டது. (க-13)


## MILLERS LIMITED

### Nominated Wholesalers

Millers Limited engaged in marketing a range of well known consumer products require Nominated Wholesalers in the following areas:

JAFFNA, VAVUNIYA, MANNAR, MULLAITIVU, BATTICALOA, TRINCOMALEE.

Applicants should be resident in the selected area, of sound financial standing, adequate storage and transport facilities. Preference will be given to applicants currently engaged in distributing consumer goods.

Applications should reach this office not later than Friday 16th June, 1989 addressed to the

General Manager,
Millers Limited,
50, York Street,
Colombo 1.


# அகதிகள் புனர்வாழ்வு நிதியத்தின் சுயதொழில் வாய்ப்புத் திட்டம்

யாழ்ப்பாணம், மே 31

"அகதிகள் புனர்வாழ்வு நிதியம் — 1983" பல்வேறுபட்ட சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து பல்வேறுபட்ட வகையில் நிர்க்கதியானவர்களுக்கு உதவவிருக்கிறது.

இவ்வமைப்பு முன்பும் பலருக்கு சுய வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

கணவன்மாரை இழந்து நிர்க்கதி நிலையில் வாழும் நூற்றுக் கணக்கான பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க "போருட்" நிறுவனத்தின் உதவியுடன் செயல் திட்டம் ஒன்றை இவ்வமைப்பு நடைமுறைப்படுத்த இருக்கிறது.

விரைவில் நடைமுறைப்படுத்தப்பட இருக்கும் இச்சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 65 பேருக்கு தையல் இயந்திரமும், 53 பேருக்கு மீன்பிடி வலைகளும், 30 பேருக்கு கறவைப் பசுக்களும், 67 பேருக்கு சிறிய கடை வியாபாரத்துக்கும், 50 பேருக்கு கோழிப் பண்ணை அமைக்கவும், 2 பேருக்கு வண்டில் மாடும், இரண்டு பேருக்கு நீர் இறைக்கும் இயந்திரமும் வழங்கப்படவிருக்கிறது.

இத்திட்டம் வெளிக்கள உத்தியோகத்தர்களின் சிபார்சின்படியே நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வமைப்பு முன்பு இன்னல் பட்டவர்களுக்கு உடுபுடைவைகள் வழங்கியதுடன், விதவைகளுக்கு சுயதொழில் வாய்ப்புக்கும் உதவியிருந்தது.

மேலும் உதவிகள் வெளிநாட்டில் இருந்து கிடைத்ததும் இன்னும் உதவிகள் வழங்கப்படும் என மேற்படி அமைப்பின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-3)


## PROFESSIONAL COURSES

### CIMA - IDPM - AAT - IAB
### PITMANS BOOK - KEEPING

சனி, ஞாயிறு வகுப்புகள்

ஆரம்பம்: 03 - 06 - 1989

தகைமை, திறமை, ஆற்றல், அனுபவம், கடமை, கண்ணியம் எல்லாம் ஒருங்கே பொருந்திய போதனையில் சாதனை புரியும் முன்னணி விரிவுரையாளர்களைக் கொண்ட மாணவ சமுதாயத்தின் இதயம் கவர்ந்த ஒரே கல்வி நிறுவனம்:

## CANTABIA INSTITUTE

No. 21, MAIN STREET,
JAFFNA.

(C/2671)



பிரயாணம்.... பிரயாணம்... பிரயாணம்....

## "M" THREE TRAVEL

வழங்கும்

### சவூதி அரேபியா பிரயாணம்

| | | | |
|---|---|---|---|
| (i) | SUPERINTENDENT ROAD & GROUN | 1 வெற்றிடம் | 2200 SR |
| (ii) | CREW CHIEF | 9 வெற்றிடங்கள் | 900 SR |
| | (A) ELECTRICAL TECHNOLOGY (B) CIVIL WORKS (C) MECHANICAL TECHNOLOGY (D) HORTICULTURE (E) AGRICULTURE | மேற்படி தொழிலில் அனுபவமுள்ளவர்கள் | |
| (iii) | SHIFT LEADER [POWER PRODUCTION PLANT] | 2 வெற்றிடங்கள் | 1050 SR |
| (iv) | DRAFTSMAN | 1 வெற்றிடம் | 700 SR |
| (v) | CONTROL OPERATOR [ELECTRICAL SWITCHGEAR OF POWER PRODUCTION PLANT] | 3 " | 950 SR |
| (vi) | HORTICULTURIST | 1 " | 700 SR |
| (vii) | MECHANIST | 1 " | 650 SR |
| (viii) | MASON | 9 " | 550 SR |
| (iX) | SEWAGE PLANT OPERATOR / MECHANIC | 6 " | 800 SR |
| (x) | PAINTER | 12 " | 550 SR |
| (xi) | CARPENTER | 5 " | 600 SR |
| (xii) | LOCKSMITH [பூட்டுத்திருத்துபவர்] | 1 " | 650 SR |
| (xii) | SHEET METAL WORKER | 2 " | 700 SR |
| (xiv) | SWIMMING POOL OPERATOR / MECHANIC | 1 " | 600 SR |
| (xv) | UPHOLSTERER | 1 " | 650 SR |
| (xvi) | WATER TREATMENT PLANT OPERATOR | 1 " | 800 SR |
| (Xvii) | WELDER / METAL FABRICATOR | 1 " | 650 SR |
| (xviii) | HANDYMAN | 3 " | 600 SR |
| (xix) | GARDENER | 23 " | 350 SR |
| (xx) | CONTROL CLERK / EXPEDITOR | 2 " | 600 SR |

PASS PORT (கடவுச் சீட்டு) BOND (பொண்ட்) என்பன குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

* நம்பிக்கை * நாணயம்

என்பவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்:

## 'M' THREE TRAVEL

தலைமை அலுவலகம்:
'இந்திர பவனம்'
சோதி வீதி,
காங்கேசன்துறை.

கிளை அலுவலகம்:
இல. 1, 2ஆவது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C/2767)


# எதையும் தாங்கும் இதயம் உடற்பயிற்சியினால் உருவாகும்

### பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் உரை

பண்டத்தரிப்பு, மே 31

உடற்பயிற்சி உளவளர்ச்சிக்கு சிறந்த ஊடகம் மெய்வல்லுநர்ப் போட்டிகள் சிறந்த பிரசைகளுக்கான நல்ல பண்பாடுகளை மாணவரிடையே வளர்க்கும். சோர்விலா வாழ்வையும் எதையும் தாங்கும் இதயத்தையும் கொடுக்கும்.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வைத்திய கலாநிதி ஆர் கணேசமூர்த்தி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், வெளிநாடுகளில் சிறந்த விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு பல்கலைக்கழகம் புகுவதிலும் மற்றும் சகல விடயங்களிலும் சலுகை மதிப்பு உண்டு.

எமது நாட்டில் அந்த நிலைமை இல்லாததனால் மாணவ மாணவியர் பெற்றோர் இவற்றில் ஆர்வம் காட்டுவது குறைவு என்றார்.

கல்லூரி அதிபர் திருமதி தம்பிராசா உரையாற்றுகையில்,

'எமது கல்வித்திட்டத்தில் உடற்கல்வி உடற்பயிற்சி என்பன இணைந்துள்ளன. இவற்றில் கட்டாயம் அனைவரும் பங்குகொள்ள வேண்டும்' என்று கூறினார்.

வைத்திய கலாநிதி திருமதி ஜெயதேவி கணேசமூர்த்தி பரிசில்களை வழங்கினார். (க-120)

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், மே 31

வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலய இல்ல விளையாட்டுப்போட்டி இன்று புதன்கிழமை வித்தியாலய அதிபர் திரு. ப. சிவஞான சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். (ச)


## அச்சுக்கோர்ப்பாளர் தேவை

அனுபவம் உள்ள அச்சுக்கோர்ப்பாளர்கள் தேவை. திறமைக்கும் அனுபவத்துக்கும் ஏற்பச் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

பத்திரிகைகளில் பணிபுரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆண்கள், பெண்கள் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். 3 - 6 - 89 சனிக்கிழமைக்குப் பிந்தாமல் நேரில் வரவும்.

முகாமையாளர் (ஆளணி),
நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் [பிரைவேட்]லிமிட்டெட்,
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்



## பத்திரிகையாளர் பதவிகள்

தினசரி பத்திரிகைகளில் பணிபுரிந்த அனுபவமும் திறமையும் உடைய உதவி ஆசிரியர்கள், அலுவலகச் செய்தியாளர்கள் தேவை.

மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம் உடையவர்களின் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை தரப்படும்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் நிரம்பிய தேர்ச்சி உடையவர்களும், தொழிலில் ஆர்வத்துடன் சேர்ந்து உழைக்கக்கூடிய தகுதி உடையவர்களும் விரும்பத்தக்கது.

முன்னர் பணிபுரிந்த நிறுவனங்களில் பெற்ற அத்தாட்சிப் பத்திரங்களுடனும், ஆற்றிய பணிகளின் விவரங்களுடனும்—

முழுச் சுய விவரங்களுடனும், நற்சான்று பகரக்கூடிய உறவினரல்லாத இருவரின் நற்சாட்சிப் பத்திரங்களுடனும் —

2- 6- 1989 வெள்ளிக்கிழமைக்குப் பிந்தாமல் விண்ணப்பிக்கவும்:

ஆசிரியர்,
நியூ உதயன் பப்ளிகேஷன்,
(பிறைவேட்) லிமிட்டெட்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### நாகராசா ஞானகுலசிங்கம்
[தரன், குட்டி]
வல்வெட்டித்துறை

தாயின் மடியில்: 07-09-1966
மண்ணின் மடியில்: 02-05-1989

வாழ் வொன்று தேடி
வாழ்வே சாவென்றாய்
தாழ் வொன்று வருமுன்பே
தன்னுயிர் தனை ஈந்தாய்

ஞானகுலசிங்கத்தின் இறுதி ஊர்வலத்தில் பெருந்திரளாகக் கலந்து கொண்ட மக்களுக்கும், இறுதிக் கிரியையின் பொழுது சகல விதத்திலும் உதவிகள் செய்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

1.6.89 வியாழக்கிழமை நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் ஆத்மாசாந்திஅடையப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்:
—குடும்பத்தினர்

ஆதி கோயிலடி,
வல்வெட்டித்துறை.

(11082)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மாவட்டத்தில்

# சேதம் அடைந்த பாடசாலைகளை திருத்தும் வேலைகள் விரைவில்

யாழ்ப்பாணம், மே 31

யாழ் மாவட்டத்தில் வன் செயல் சம்பவங்களின் போது சேதம் அடைந்த பாடசாலைகளில் மேற்கொள்ளவேண்டிய திருத்த வேலைகள் விரைவில் ஒப்பந்தகாரர்களுக்கு வழங் கப்படவிருக்கின்றன.

பாடசாலைகளின் திருத்த வேலைகள் சம்பந்தமாக யாழ். கல்வி அலுவலகத்தால் கோரப் பட்ட கேள்விகளுக்கு சமர்ப் பிக்கப்பட்ட பத்திரங்கள் கடந்த வாரம் ஒப்பந்தகாரர் முன் திறக்கப்பட்டன.

விரைவில் ஒப்பந்தம் செயல்பட்டு வேலைகள் ஆரம்ப மாகும். [ஓ-3]

## பரந்தன், கிளிநொச்சி பகுதிகளில் கொள்ளைகள்

வட்டக்கச்சி, மே 31

பரந்தன், கிளிநொச்சிப் பகுதிகளில் அடிக்கடி கொள் ளைகள் நடைபெற்று வருகின் றன. ஒரே இரவில் பல கொள் ளைச் சம்பவங்களும் நடைபெற் றுள்ளன.

கடந்த சனிக்கிழமை பரந்த னில் வர்த்தகர் ஒருவரின் வீட் டில் கொள்ளையிடப்பட்டது. சுமார் 60 ஆயிரம் ரூபா வரை யில் கொள்ளையிடப்பட்டதா கக் கூறப்பட்டது.

அதே சமயம் கடந்த வாரத் தில் மற்றொரு கடை உரிமை யாளர் வீட்டிலும், அரசஊழி யர் ஒருவரின் வீட்டிலும் கொள்ளையிடப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதே வேளை கனகாம்பிகைக் குளம் பகுதியிலும் ஒரே நாளில் பல வீடுகளில் ஆயுதக்கோஷ்டி யினர் கைவரிசையைக் காட்டி யுள்ளதாக கிளிநொச்சிப் பொலீஸில் புகாரிடப்பட்டுள் ளது. (ஓ-163)

## மீசாலையில் விபத்து

பச்சிலைப்பள்ளி, மே 31

திங்களன்று மீசாலை ஐயா கடையடி சந்தியில் மோட் டார் சைக்கிலும் லொறியும் மோதி விபத்துக்குள்ளாகின.

இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த மீசாலை யைச் சேர்ந்த கே. பரமேஸ் வரன் (வயது 21), வி. பாலச் சந்திரன் (வயது 26) ஆகி யோர் பலத்த காயங்களுடன் சாவகச்சேரி வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சையின் பின்னர் யாழ். பெரியாஸ்பத்திரிக்கு அம்புல ன்ஸ் மூலம் அனுப்பிவைக்கப் பட்டனர். (ஓ-117)

## டாக்டர் கொலை

கொழும்பு, மே 31

ஹோமகமவில் தனியார் மருத்துவ மனை நடத்தி வந்த டாக்டர் அலன் டி. சில்வா என்பவர் கடந்தசனிக் கிழமை காலை இனந்தெரியாத நபர் களால் சுட்டுக்கொல்லப்பட் டார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மருத்துவ மனை க்குள் புகுந்து டாக்டரைச் சுட்டுதப்பிச்சென்றனர். (ஓ-எ)

## ரூ.15 ஆயிரம் உதவிக்கு படிவங்கள்

பச்சிலைப்பள்ளி, மே 31

பளை உதவி அரசாங்க அதி பர் பகுதியில் வன்செயல் களால் முற்றாகப் பாதிக்கப் பட்ட வீடுகளைப் புனரமைக்க பதினையாயிரம் ரூபா நன் கொடையாக வழங்கு வதற்கான படிவங்கள் பாதிக் கப்பட்டவர்களுக்கு அவ்வப் பகுதி கிராமசேவை அலுவலர் களால் வழங்கப்பட்டு வரு கின்றன.

இத் தொகையில் ரூபா 250/- கூலிப்பணமாகவும், மிகுதி கட்டடப் பொருள் களாகவும் இரு கட்டங்களில் வழங்கப்படும்.

உதவி அரச அதிபர் திரு. சு. கந்தசாமி இதனைத் தெரி வித்தார். (ச-117)

## புங்குடுதீவில் கொள்ளை

யாழ்ப்பாணம், மே 31

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு புங்குடுதீவு 12-ஆம் வட் டாரத்தில் இரு வீடுகளில் கொள்ளையிடப்பட்டது.

ஆயுதம் தரித்த கோஷ்டியி னரே கொள்ளையில் ஈடுபட்ட தாகக் கூறப்பட்டது.

ஒரு லட்சம் ரூபாவுக்கு அதி கமான பெறுமதியுள்ள தங்க ஆபரணங்கள் இரு வீடுகளி லும் கொள்ளையிடப்பட்டதா கத் தெரியவருகிறது. (ஓ-51)

## 112 வயது வாழ்ந்த மூதாட்டி

வடமராட்சி, மே 31

அல்வாயில் 112 வயது மூதாட்டி ஒருவர் கடந்த 26 ஆம் திகதி காலமானார்.

1877 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி பிறந்த திருமதி தங்கம் சிவப் பிரகாசம் என்பவரே இந்த மூதாட்டி ஆவார்.

அவர் தமது உணவில் பனம் பண்டங்களான ஒடி யல், பனாட்டு மற்றும் குரக் கன், தினை ஆகியவற்றைப் பெரிதும்சேர்த்துக்கொண்டு வந்தார் என்றும் அதுவே அவருடைய நீண்ட ஆயு ளின் இரகசியம் என்றும் அவரது உறவினர்கள் கூறி னார்கள், (க-160)

## கட்டுத் துவக்கு வெடித்துக்காயம்

யாழ்ப்பாணம், மே 31

காட்டிற்குள் வைக்கப்பட்டி ருந்த கட்டுத்துவக்குவெடித்து ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் திங்கள் காலை 6 மணியளவில் உடை யார் கட்டு காட்டுப் பகுதியில் இடம்பெற்றது.

காரைநகர் வாசியான வேலன் பொன்னுத்துரை (வயது 52) என்பவரே காய மடைந்தவராவார். (ஓ-எ)

## உறுப்பினரின் வீடு தீக்கிரை

கொழும்பு, மே 31

தென் மாகாண சபையின் ஐ. தே. க. உறுப்பினர் பி.டி. தர்மதாஸா என்பவரின் வாசஸ்தலம் இனந்தெரியா தோரால் கடந்த வியாழக் கிழமை தீக்கிரையாக்கப்பட் டது.

அதிகாலை 2 மணியளவில் மொரவாக்க என்னும் இடத் திலுள்ள அவரது வீட்டின் மீது பெற்றோல் குண்டு வீசப் பட்டது. சேதம் 20 லட்சம் ரூபாவரை இருக்கும் என்று மதிப்பிடப்பட்டது. (ஓ-எ)

## வேம்படியில் பாராட்டுவிழா

யாழ்ப்பாணம், மே 31

வேம்படி மகளிர் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங் கமும் பழைய மாணவர் சங்கமும் இன்று புதன்கிழமை 31 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி மேபிள் தம்பையா மண்டபத்தில் இளைப்பாறிய அதிபர் திருமதி அ. இராஜரட்ணத்துக்கு சேவை நலம் பாராட்டு விழாவை நடத்தவுள்ளன

## முகாம்கள் மூடப்பட்டன

பச்சிலைப்பள்ளி, மே 31

பூநகரி, மன்னார் வீதியில் வெள்ளாம்குளம் பல்லவரா யன்கட்டு ஆகிய இடங்களில் இருந்த முகாம்கள் மூடப்பட் டன.

இவ்வீதியில் உள்ள ஏனைய முகாம்களின் முன்னால் சோத னைகள் குறைந்துள்ளதாகவும் பொதிகள் மட்டுமே சோதனை யிடப்படுவதாகவும் தெரிய வருகிறது. (ஓ-117)

## தீர்மானம்

கொக்குவில், மே

பாடசாலை அபிவிருத்தி சபை நிதியிலிருந்து பாடசா தொண்டர் ஆசிரியைகளு மாதாந்தம் ரூபா 200 வழங்க கல்வித் திணைக்கள தின் அனுமதியைக் கோ வேண்டும்.

யாழ். இந்து மகளிர் ஆர பப் பாடசாலை அபிவிருத்தி சங்க வருடாந்த பொது கூட்டத்தில் இத்தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது. (க-69)


★ மஹோற்சவம் ★

வளலாய் சித்திவிநாயகர் தேவஸ்தான மஹோற்சவம் (25-05-89) வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (02-06-89) வெள்ளிக்கிழமை ரதோற்சவமும், (03-06-89) தீர்த்தோற்சவமும் நடைபெறும். சிவ ஸ்ரீ க. பாஸ்கரக்குருக்கள் அவர்கள் மஹோற்சவ குருவாக இருந்து கிரியைகளை நடாத்தி வருகின்றார்கள்.

[11105]

● கனடா ● ஜேர்மன்
● இத்தாலி ● பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்குச் செல்வதற்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

கனடா, இத்தாலி செல்வதற்கு பாஸ்போர்ட் தந்தவர்கள் உடனடியாக அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

பஃரேன்

✶ Seaman (மாலுமி) தேவை
(C. D. C.) கப்பல் கடமைபுரிந்த அத்தாட்சிப் பத்திரத்துடன் வரவும்.

| | சம்பளம் |
|---|---|
| 10 மேசன் தொழிலாளர் | 65 B. D. |
| 10 தச்சுத் தொழிலாளர் | 65 B. D. |

V. T. R. TRAVELS
[உரிமையாளர் வே. தங்கராஜா]
41, 3rd Cross Street,
JAFFNA.

மல்லாகத்தில் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

Shatheesan Travels & Tours
Miller House
Mallakam Junction,
MALLAKAM.
(824)

சுஜேரா ரவல்ஸ்

★ வெற்றிடங்கள் ★

சவூதி அரேபியா (Saudi Arabia)

HOUSE MAIDS பெண்கள்
LABOURERS ஆண்கள்
CLEANERS ஆண்கள்

தைவான் (Taiwan)

தைவானுக்குப் போக விரும்புவோர் எமது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும். ஆங்கில அறிவுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மூன்று கிழமைகளில் அனுப்பிவைக்கப்படுவார்கள்

ஜேர்மனி (Germany) க்குப் பிரயாணம் செய்ய விரும்புவோர் (16 வயதிற்கு உட்பட்டவர்களும் மேற் பட்டவர்களும்) தாமதியாது எங்கள் காரியாலயத் துடன் தொடர்பு கொள்ளவும்.

சுஜேரா ரவல்ஸ்
21, வேம்படி ரோட்,
யாழ்ப்பாணம்.
(C/2751)

விவசாயிகளே!

● களைகள் முளைக்கமுன் அழிக்க வல்ல
● பரந்த செயற்பாடுடைய ஒரே களை நாசினி

லஸ்சோ
[அலக்குளோர் - Alachlor]

நாற்று நடப்பட்ட
மிளகாய்க்கன்றுகள்
வெங்காயம்
நிலக்கடலை
சோயா அவரை
பாசிப்பயறு
கௌபீ
ஆகிய பயிர்களுக்கு

விவசாயத் திணைக்களத்தால் சிபார்சு செய்யப்பட்டுள்ளது

LANKEM
ලංකෙම් லங்கெம்

லங்கெம் விவசாயிகளின் தோழன்

சில்லறை விலைகள்: 400 மி.லீ- ரூபா 135.00
200 மி.லீ- ரூபா 75.00

வட மாகாண விநியோகஸ்தர்கள்:

(1) V. வடிவேல்
219, 221, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(2) புஸ்பா அன் கோ
128 B, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(3) வீ. கே. வீ'ஸ் ஸ்டோர்ஸ்
353, கண்டி வீதி,
கிளிநொச்சி.

(4) பிள்ளையார் ஸ்டோர்ஸ்
மல்லாவி,
யோகபுரம்.

[சி-2646]


உ
ஸ்ரீ தியாகராஜ ஸத்குரு துணை

★ இசை அரங்கேற்ற அழைப்பு ★

நாதஸ்வர கலாநிதி என். கே. பத்மநாதன்
அவர்கள் திருமகள்
சென்னை அடையாறு கர்நாடக இசைக்கல்லூரி சங்கீத வித்வான்
செல்வி கனகாம்பரி அவர்களின்

இசை அரங்கேற்றம்



| | |
|---|---|
| இடம்: | நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபம் |
| நாள்: | 04 - 06 - 1989 ஞாயிற்றுக்கிழமை |
| நேரம்: | பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பம் |
| தலைமை: | சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் |
| பிரதம விருந்தினர்: | பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் [நுண்கலைப்பீடத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்] |

சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாய் ஏற்று, அரங்கிற் கலந்து சிறப்பிக்குமாறு இசை ஆர்வலர்கள், நண்பர்கள், சுற்றத்தவர் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

'எந்தரோ மஹானு பாவுலு அந்தரிகி வந்தனமு'

இவ்வுலகில் மேன்மையுடையவர்கள் எத்தனை பேர் உளரோ அத்தனை பேருக்கும் வணக்கம்!

அழைப்பு: என். கே. பத்மநாதன் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்மாந்துறை நிலைமை

அமைச்சர் விஜேரத்தின ...குழுவுடன் சம்மாந்துறைக்கு ...ஞாயிறு விஜயம் செய்திருந்த ...க்கிய தேசியக் கட்சி எம். பி ...பான ஐனுப். ஏ எச். எம். அஸ் ...ர் அங்குள்ள நிலைமைகுறித்து ...பின்வருமாறு சொன்னார்:-

இரண்டாயிரம் வரையான முஸ்லிம்கள் அமைச்சரின் விஜ...யத்தின்போது இந்திய அமை...திப்படையை வெளியேற்றி இலங்கைப் படையைக் கட...மையில் ஈடுபடுத்தும்படி கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

உங்களால் எமக்கு பாதுகாப்புத் தரமுடியாதுபோனால் எமக்கு ஆயுதம் தாருங்கள், நாம் எம்மைப் பாதுகாப்போம்'' என்று கோரும் சுலோக அட்டைகளை அவர்கள் வைத்திருந்தனர்.

வீரமுனை சென்று அமைச்சர் தமிழ் அகதிகளைச் சந்தித்தார்.

இலங்கை இராணுவத்தைக் கடமையில் ஈடுபடுத்துவதை தமிழ் அகதிகள் எதிர்த்து அமைச்சரிடம் கருத்து வெளியிட்டனர். (ஒ-எ)


## ★ விநாயகா டூர்ஸ் ★

[அரசாங்கப் பதிவு பெற்றது 7753]

120 வது தென் இந்திய யாத்திரை சுற்றுலா

ஆரம்பம்:- 20-08-89 முடிவு:- 08-09-89

இடங்கள்:-

திருச்சி, மலைக்கோட்டை, ஸ்ரீரங்கம், சமயபுரம், வயலூர் முருகன், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயங்கள், கன்னியாகுமரி, விவேகானந்தர் ஞாபகார்த்த மண்டபம், சாந்தி மண்டபம், அரபிக் கடல் இந்து சமுத்திரம், வங்காள விரிகுடா ஒன்று சேரும் திரிவேணி சங்கமம், ஆகாயத்தில் நவக்கிரகங்களையும் ச-ரி-க-ம-ப-த-நி-ச- நாதங்களையும் ஜலதரங்க மிருதங்க ஒலிகளையும் எழுப்பும் தூண்களையும் கொண்ட சுசீந்திர ஆலயம், திருமலை நாயக்கர் அரண்மனை, குற்றால நீர் வீழ்ச்சியில் நீராடுதல், 27 மயிர்க் கூச்செறியும் வளைவுகளுள்ள திம்பம்மலை, மைசூர் மகாராசா அரண்மனை, ஒருகல் நந்தி, சாமுண்டீஸ்வரி அம்மன், பிருந்தாவனம், பெங்களூர், திருப்பதி, மதராஸ், மஹாபலிபுரம், திருக்கழுக்குன்றம், வி. ஐ. பி. தங்கக் கடற்கரை, பக்த நந்தனுருக்கு நந்தி விலகிய திருப்புன்கூர் சிதம்பரம், தஞ்சாவூர், திருப்பரங்குன்றம், பழமுதிர்ச்சோலை, திருச்செந்தூர், திருத்தணி, பழனி, சுவாமிமலை கோடைக்கானல் ஊட்டி,

22 தீர்த்தக் கட்டடங்களைக் கொண்ட இராமேஸ்வரம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில், திருக்கடவூர், அபிராமி, காரைக்கால் அம்மையார், திருநள்ளாறு சனீஸ்வரன், பூம்புகார், நாகபட்டினம், நாகூர், வேளாங்கண்ணி மாதாகோயில், திருவண்ணாமலை, புட்டப் பர்த்தியில் ஒரு நாள் தங்கி பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா தரிசனம் பெறுதல்.

விபரங்களுக்கு:-

இராஜநாயக தியேட்டர், காங்கேசன்துறை,
திரு. R. சிவலிங்கம், ரத்ன மோட்டார்ஸ்,
(825) 55, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. சின்னத்துரை அருள்நாதன்**
(தேவன்)
[அரச செயலகம், யாழ்ப்பாணம்]

ஆண்டவன் படைப்பு: 26 - 12 - 1945
ஆண்டவன் அடியில்: 04 - 6 - 1986

அன்பின் திருவுருவே! எங்களை விட்டுப்பிரிய எப்படித்தான் மனம் வந்ததோ! உங்கள் பாசத்துக்காக ஏங்கித்தவிக்கும் நாங்கள் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் அன்பு முகத்தை மறவோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், தந்தை, மாமன், உறவினர்கள்
யாழ். அரச செயலக ஊழியர்கள்.

'தமிழகம்'
சிவகுல வீதி,
தெற்கு உரும்பராய்.

பாடசாலைப் பிள்ளைகளின்

# மதிய உணவுத் திட்டத்தில் 'பாம் போசா' வையும் சேர்க்குக

### பனை அபிவிருத்திச் சபை கோரிக்கை

அரியாலை, மே 31

பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தில் 'பாம்போசா'வையும் சேர்க்குமாறு பனை அபிவிருத்திச் சபை யாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பியைக் கேட்டுள்ளது.

புளுக்கொடியல் மா, உழுந்து மா, பயறு மா, அரிசி மா, சோயா மா, பால்மா, சீனி ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பனை அபிவிருத்திச்சபையின் உற்பத்திப் பொருளே 'பாம்போசா' ஆகும்.

இது பாடசாலைப் பிள்ளைகளின் ஊட்டச்சத்தை அதிகரிக்கும் தன்மை கொண்டது எனவும், உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-13)

## மாணவர்கள் நற்பிரசையாக விளையாட்டுத் துணைபுரிகிறது

### முல்லைத்தீவு கல்விப்பணிப்பாளர்உரை

முல்லைத்தீவு மே 31

''விளையாட்டு மூலம் சகிப்புத்தன்மை, தோல்வியையும் வெற்றியையும் ஒன்றாக மதித்தல் போன்றவற்றை மாணவர்கள் கற்றுக் கொள்கின்றார்கள். வருங்காலத்தில் அவர்கள் நற்பிரசைகளாக விளங்க விளையாட்டு மாணவர்களுக்குத் துணை புரிகின்றது.''

முல்லைதீவு ம. வி. இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துரையாற்றிய முல்லை. மாவட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். எஸ். மனோகரன் இவ்வாறு கூறினார்.

போட்டிகளுக்கு அதிபர் திரு. வே. சுப்பிரமணியம் (முல்லைமணி) தலைமை வகித்தார்.

விழா ஆரம்பத்தில் மாணவ மாணவிகளின் அணிநடையை ஏற்றுக் கொண்ட திரு. எஸ். மனோகரன், வித்தியாலயக் கொடியை ஏற்றிவிழாவை ஆரம்பித்து வைத்தார்.

வள்ளுவர் இல்லம் முதலாமிடத்தையும் சேக்கா, ஞானம் இல்லங்கள் இரண்டாம் மூன்றும் இடங்களையும் பெற்றன.

பரிசில்களைப் பிரதம விருந்தினர் வழங்கினார்.

மகா வித்தியாலய விளையாட்டுத்துறை ஆசிரியரும் செயலாளருமான திரு. மு. தேவராசா நன்றியுரை வழங்கினார். (க-92)

## கொக்குவில் இந்து முதலிடம்

யாழ்ப்பாணம், மே 31

நல்லூர் கல்வி வட்டார உடற்பயிற்சிப் போட்டியில் 17 வயது ஆண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி முதலிடம் பெற்றது. (ச)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



**தி. பரதராஜன் (மொறிஸ்)**

தாயின் மடியில்: 21-09-1969
ஆண்டவன் அடியில் 01 05-1989

நம் இனிய பரதா!
நீ மரணித்து விட்டாயா?!
நம்ப முடியவில்லை!
உன் பெயரையே பூஜிக்கும்
நேசம் மிக்க உன் மக்கள்
எப்படியிதை ஜீரணிப்பார்கள்?
அன்புச் செல்வமே!
நம் நினைவுகளில் நீயென்றும்
மரணிக்கவே இல்லை!
உன் வண்ண முகமும் சின்னப் புன்னகையும்
நமக்குத் தெரிகிறதே!
உன் பாதச் சுவடுகள்
நமக்குத் தெரிகிறதே!
ஓ! அவை—
நீ வளர்த்தெடுத்த பாதங்களோ?

உன்னை நினைந்துருகும்
அன்பு அம்மா, அப்பா, அக்காமார்,
அத்தான்மார், அண்ணன்மார்,
அண்ணி, தம்பி, தங்கை,
பேரன், பேத்தி, உற்றார்,
உறவினர்கள்.

அத்தியடி, புலோலி மேற்கு,
பருத்தித்துறை.
31-05-89 (1101)

## உணவு முத்திரை

வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உணவு முத்திரை விநியோகத்தை துரித கதியில் மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரு வாரங்களுக்கிடையில் உணவு முத்திரை விநியோகம் பூர்த்தியாகும் என உதவி அரசாங்க அதிபர் அலுவலக உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (க-68)


## ★ றேடியன்ற் கல்வி நிலையம் ★

புங்கன்குளம், அரியாலை.

"RADIANT DAY - 1989"

தினம் சார்பாக பின்வரும் இரண்டு போட்டிகள் நடத்தவுள்ளோம்.

✶ அமரர் செ. கந்தையா ஞாபகார்த்த கிண்ணத்துக்கான மட்டுப்படுத்தப்பட்ட 20 ஓவர் மென்பந்து கிறிக்கற் போட்டி

✶ பொது அறிவுப்போட்டி குழுக்களுக்கிடையே நடத்தப்படும்.

09- 06- 1989க்கு முன் விண்ணப்பிக்கவும்-
விபரங்களை நிலையத்தில் பெறுக. (821)

## ★ வேலை வாய்ப்பு ★

(1) குவைற்:

(1) எயாபோட் கிளினேர்ஸ் — சம்பளம் - 50 KD.
வயது: 22 — 35 வரை - ஆங்கிலம் அல்லது அரபு தெரியவேண்டும்

(2) கனரக வாகனச் சாரதிகள் — சம்பளம் - 70 KD.
(வெளிநாட்டு லைசன்ஸ் - அனுபவச் சான்றிதழ்)

(3) வீட்டுச் சாரதிகள் -- சம்பளம் - 40 KD.
(5 வருட அனுபவச் சான்றிதழ்)

(4) விற்பனையாளர் (SALESMAN) சம்பளம் - 70 KD.
(5 வருட அனுபவச் சான்றிதழ்)

(5) அலுமினிய (F) பிற்றர் ALUMINIUM FITTERS.
— சம்பளம் 65 - KD
அனுபவம் அலுமினியம் DOORS WINDOWS ETC.

(6) பெண் சுத்திகரிப்பாளர் (FEMALE CLEANERS).
— சம்பளம் - 30 KD.
வயது; 29 க்கு மேல்

(7) வீட்டுப்பணிப் பெண், (HOUSE MAID) வீட்டுப்பணிப்பையன் (HOUSE BOY)
— சம்பளம் - 30 KD.

(2) சவூதி:
அல்ராஜ் கோழிப்பண்ணைத் தொழிலாளர்
— சம்பளம் - 400 SR.

(3) ஓமான்:
சகல தரத்தினருக்கும் வேலை வாய்ப்பு உண்டு.

மற்றும்: ஜேர்மனி, சுவீற்சர்லாந்து, கனடா (குடும்பத்துடன் மட்டும்) ஆகிய நாடுகளுக்கும் பயண ஒழுங்குகள் செய்து தரப்படும்.
விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**T. V. TRAVELS**
BROWN ROAD, KOKUVIL.
[சி-2763]

## ACCOUNTANCY CLASS
NOV - DEC 1989

C. I. M. A STAGE I
BATCH I - 27 5- 1989
BATCH II - 05- 6- 1989

A. A. T (LONDON)
PRELIM. 27- 05- 1989

C. I. M. A
STAGE II - 03- 06- 1989
STAGE II - 03- 06- 1989

A.A.T (SRI LANKA)
STAGE I 03- 06- 1989

GROUP

I. D. P. M
PART I - 27- 05- 1989

I. D. P. M
PART II - 10- 06 -198[illegible]

I. A. B FOUNDATION
BATCH I 27- 05- 1989
BATCH II 05- 06- 1989

I. A. B
INTER & FINAL 10- 06- 1989

OUR PANEL INCLUDES
(Mr. R N. Varendiran, Mr. K. Nanthakumaran, Mr. . Mahendiran, Mr. S. Thilakakumar, Mr. K. Kamalakumar. Mr. S. Narendiran, Mr. D. Gnanaseelan)

CONTACT

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, St. PETERS LANE,
HOSPITAL ROAD,
JAFFNA

(சி/2759)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
இற்பிறந்தார் கண் அல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு.

**பொருள்:**
நடுவு நிலைமையும் நாணமும் உயர்குடியில் பிறந்தவரிடத்தில் அல்லாமல் மற்றவரிடத்தில் இயல்பாக ஒருசேர அமைவதில்லை.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22078
31 - 05 - 1989 ❋: பெ: இல: 83

## வேலை இழந்த தமிழ் அரச ஊழியர்

1983 இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு மீண்டும் வேலை வழங்குவதில் தாமதம் காட்டப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக, பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக் குழு, ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது.

1983 ஆம் ஆண்டில், தமிழர்களுக்கு எதிராக ஏவிவிடப்பட்ட இனக்கலவரம், இலங்கையின் அரசியல் சரித்திரத்தில் அழிக்க முடியாத அரக்கத் தனம் மிக்கது. வேறு எந்தத் தடவையிலும் இல்லாத அளவில், வெளி மாவட்டங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் பெரும் எண்ணிக்கையில் பாதிக்கப்பட்டது அப்போது தான்.

அதிகமான தமிழர்கள் கொலையுண்டதும், உடைமைகளை இழந்ததும், இடம் பெயர்ந்ததும் அந்தக் கலவரத்தினால் தான். ஈழத் தமிழ் மக்களின் அரசியலில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்த அந்தக் கறுப்பு ஜூலைக் கலவரத்தினால் உயிர் இழந்தவர்கள், உடைமைகளை இழந்தவர்கள் போக, தொழில் இழந்தவர்களும் ஆயிரக் கணக்கானோர்.

அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் அரசாங்க, தனியார் துறை ஊழியர்கள் பெரும் பங்கினர். வெளி மாவட்டங்களுக்குச் சென்று பணிபுரிவது உயிர் ஆபத்து நிறைந்தது என்பதால் அவர்கள் தமது வேலை இடங்களுக்குச் செல்லாமல் ஒதுங்கிக் கொண்டவர்கள்.

பாதுகாப்பற்ற சூழ்நிலையில் தொடர்ந்து வேலைக்குச் சமுகமளிக்க முடியாமல் இருந்த அவர்களை, வேலையில் இருந்து விலகியவர்களாகக் கருதி அரசு பதவிநீக்கம் செய்தது.

பாதுகாப்பு நிலைமை பாதிப்படைந்தது அரச ஊழியர்கள் செய்த குற்றமல்ல. உயிருக்கு அஞ்சித்தான் அவர்கள் கடமைக்குச் சமுகமளிக்கவில்லை என்று எடுத்துக் காட்டி அரசிடம் நியாயம் கோரப்பட்டது. ஐந்து வருடங்களின் பின்னர் அரசு கண் திறந்தது. பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக் குழுவினர் இடைவிடாது இடித்துரைத்ததன் விளைவாக, அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்ற நிலையில், அரசுக்கு நியாயம் தெரிந்தது. தனது தவறு புரிந்தது.

அதனைத் தொடர்ந்து, இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட அரச ஊழியருக்கு மீண்டும் வேலை வழங்க வகை செய்யும் உத்தரவு கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் அரசினால் விடுக்கப்பட்டது.

ஆனால் வருடம் ஒன்று கழிந்தும், பாதிக்கப்பட்ட அரச ஊழியருக்கு இன்னும் மீண்டும் வேலை வழங்கப்படவில்லை என்பது வேதனை தருவதாகும். அதிகாரிகள் இது விஷயத்தில் அசமந்தமாகவும், அக்கறை இல்லாமலும் நடந்து கொள்வது பெரிதும், கண்டிக்கத்தக்கது.

தாமும் ஓர் அரச ஊழியர். தமக்கு இதே கதி நேர்ந்து, ஆறு வருடங்கள் தொழில் இன்றி வருவாய் இன்றித் தமது குடும்பம் நிர்க்கதிக்கு ஆளானால் எப்படியாகும் என்பதை ஒரு கணம் தாமதம் செய்யும் அதிகாரிகள் சிந்தித்துப் பார்க்கட்டும். தம்மைப் போன்ற அரச ஊழியரின் வாழ்க்கை நலனுக்குத் தடைக்கல்லாக இருப்பது பெரும் பாவம் என்பதை உணரட்டும்.

ஜனாதிபதி பிரேமதாச செயல் வேகம் மிக்கவர். இன்றைக்குச் செய்யவேண்டியதை நாளைக்கு என்று பின் போடாதவர். நூற்றுக்கணக்கான குடும்பங்களின் நலனைக் கருத்திற் கொண்டு, அசட்டையாக இருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தட்டி எழுப்பிச் செயற்பட முடுக்கிவிட வேண்டும் என்று அவரைக் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழர்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களைத் தள்ளிப் போடலாம், இழுத்தடிக்கலாம், தாமதிக்கச் செய்யலாம், அக்கறை காட்ட வேண்டியதில்லை என்ற அரச சேவையினரின் மனப்போக்கையும், செயற்பாட்டையும் கண்டித்து அந்நிலையைப் போக்குவதற்கு அவர் முன் வருவாரா?

# பெனசிரின் 1ஆவது அமெ. விஜயம்
# ஜூன் 6 இல் புஷ்ஷுடன் சந்திப்பு!

### காங்கிரஸில் ஜூன் 7 இல் உரை

வாஷிங்டன், மே 30

பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனசிர் பூட்டோ முதலாவது உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு அடுத்த வாரம் அமெரிக்கா செல்கிறார்.

வருகிற ஜூன் 6ஆம் திகதி அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷை திருமதி பெனசிர் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவார் என்று அறிவிக்கப்படுகிறது.

அமெரிக்க காங்கிரஸின் இரு சபைகளின் இணைப்புக் கூட்டத்தில் பிரதமர் பெனசிர் முக்கிய உரை ஒன்றை நிகழ்த்தவுள்ளார்.

அவரின் அமெரிக்க விஜயத்தில் இதுவே முக்கிய அம்சமாக இருக்கப் போகிறது.

இக் கௌரவத்தைப் பெறும் இரண்டாவது பாகிஸ்தான் தலைவர் இவராவார்.

1962இல் பாகிஸ்தான் அதிபராக இருந்த அயூப்கானுக்கு அமெரிக்க காங்கிரஸில் பேசும் கௌரவம் கிடைத்தது.

ஜூன் 7ஆம் திகதி பெனசிர் உரை நிகழ்த்துவதை அமெரிக்க டெலிவிஷன் நிலையங்கள் நேரடியாக ஒளிபரப்புச் செய்யவுள்ளன.

**பதவி நீக்கம்**

இதே வேளை பாகிஸ்தான் புலனாய்வு பிரிவின் அதிபர் லெப்டினன்ட ஜெனரல் ஹமீட்குல் என்பவரை பிரதமர் பெனசிர் பதவி நீக்கஞ் செய்ததில் அமெரிக்கத் தலையீடும் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜலலபாத் நகரை ஆப்கன் அரசுப்படைகளிடமிருந்து கைப்பற்றும் போராட்டத்தில் கெரில்லாக்களுக்கு ஏற்பட்ட தோல்விக்கு ஜெனரல் குல் தான் காரணம் என்று அமெரிக்கா கருதுகிறது.

ஜலலபாத் தோல்வி குறித்து அமெரிக்க காங்கிரஸுக்கு விளக்கம் கொடுக்க வேண்டிய நிலை அமெரிக்காவுக்கு ஏற்பட்டுள்ளது.

அதற்கு ஜெனரல் குல் என்பவரை பலிகடாவாக்கும்படி அமெரிக்க அரசு நிர்ப்பந்தித்தது என்றும் அதற்கு பிரதமர் பெனசிர் பணிந்து விட்டார் என்றும் பாகிஸ்தான் எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

## இந்திய - பாக். உறவு குறித்து டிக்ஸிற்!

இஸ்லாமபாத், மே 30

இந்திய - பாகிஸ்தான் ராஜதந்திர உறவுகள் வருகிற ஜூலை மாத நடுப்பகுதியில் சகஜ நிலைக்கு வந்துவிடும்.

பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் பாகிஸ்தான் டைம்ஸ் நாளிதழுக்கு அளித்த பேட்டியில் முன்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இந்திய - பாகிஸ்தான் உறவு குறித்து கொள்கை முடிவு ஒன்று விரைவில் எடுக்கப்படவிருப்பதாகவும் திரு. டிக்ஸிற் தெரிவித்தார். (ஒ-எ)

## சர்வதேச கிரிக்கெட் சஞ்சிகை ஆசிரியபீடத்தில் வெற்றிமுனி

லண்டன், மே 30

கிரிக்கெட்லைப்' என்ற சர்வதேச சஞ்சிகையின் ஆசிரிய பீடத்தில் ஒருவராக இலங்கை கிரிக்கெட்வீரர் சிதாத் வெற்றிமுனியும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

வருகிற ஜூன் மாதத்திலிருந்து இச்சஞ்சிகை பிரிட்டனில் வெளிவரஉள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட்வீரர் இம்ரான்கான் சஞ்சிகையின் ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

ஆசிரியர்பீடத்தில் ஜமேக்கா பிரதமர் மைக்கல் மான்லி, ஏ. ஆர். புக்கதிர், எச். டி. டிக்கி பேர்ட், அயன் சப்பல், கிறிஸ் கௌட்றி, சுனில் கவாஸ்கர், மைக்கல் ஹோல்டிங், ஜோன்ரைட் ஆகியோர் உள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட்பற்றிய விமர்சனங்கள் இச்சஞ்சிகையில் பிரசுரமாகும். [க-எ]

## இந்திய நாடாளுமன்றம்
# உதயசூரியன் சின்னத்தில் போட்டி; முதல்வர் கருணாநிதி அறிவிப்பு

### பொதுச்சின்ன யோசனை நிராகரிப்பு

சென்னை, மே 30

வருகிற நாடாளுமன்றத் தேர்தலின்போது ''உதயசூரியன்'' சின்னத்தில்தான் தி. மு. க. போட்டியிடும்.

இதனை தி. மு. க. தலைவரும் முதலமைச்சருமான திரு. மு. கருணாநிதி ஜனதா தள் தலைவர் வி. பி. சிங்கிடம் நேரடியாகத் தெரிவித்துவிட்டார்.

தேசிய முன்னணி என்று அழைக்கப்படும் ஜனதா தள்ளில் ஏழு அரசியல் கட்சிகள் அங்கம் வகிக்கின்றன.

அவற்றில் ஒன்று தி. மு. க. வருகிற தேர்தலில் 'ஜனதா தள்' இல் அங்கம் வகிக்கும் கட்சிகள் பொதுச்சின்னத்தில் போட்டியிடவேண்டும் என்று ஜனதா தள் தலைவர்களில் ஒருவரும் ஹரியானா முதலமைச்சருமான தேவிலால் கூறி வருகிறார்.

ஆந்திர மாநில முதலமைச்சர் என். ரி. ராமராவும் இதையே வலியுறுத்தி வருகிறார்.

அண்மையில் சென்னை வந்த திரு. வி. பி. சிங்கும் பொதுச் சின்னத்தையே திரு. கருணாநிதியிடம் வற்புறுத்தினார்.

திரு. கருணாநிதி அதனை ஏற்க மறுத்துவிட்டார்.

'உதயசூரியன்' சின்னத்திலேயே தி. மு. க. போட்டியிடும் என்று திரு. கருணாநிதி கூறிவிட்டார்.

1952ஆம் ஆண்டில் இருந்து தி. மு. க. மாநில மற்றும் மத்திய தேர்தல்களில் உதயசூரியன் சின்னத்திலேயே போட்டியிட்டு வருகிறது.

இது விஷயத்தில் அவசரப்பட்டு முடிவு எடுக்கக்கூடாது என்று திரு. வி. பி. சிங் கூறினார்.

ஜனதா தள் இந்தியா முழுவதிலும் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டால் என்ன என்று திரு. வி. பி. சிங்கிடம் கேட்கப்பட்டது.

ஜனதா தள் தலைமைப்பீடம் இந்த யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

ஆனால் இது சட்டச் சிக்கலை ஏற்படுத்துமென அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. [எ]

● எரிபொருள் நெருக்கடி

# பாடசாலைகளுக்கு மூடுவிழா; நேபாள அரசு நடவடிக்கை!

காத்மண்டு, மே 30

நேபாளத்தில் உள்ள சகல பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளன.

எரிபொருள் நெருக்கடி காரணமாக நேபாள அரசு இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய - நேபாளம் வர்த்தக உறவு துண்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நேபாளம் எரிபொருள் பெறுவதில் பெரிய கஷ்டத்தை அனுபவித்து வருகிறது.

இதனால் இருநாடுகளின் ராஜதந்திர உறவுகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை - நேபாளத்துடனான பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கும்படி அமெரிக்க அரசு, இந்தியாவைக் கேட்டுள்ளது. (எ)

### பங்களாதேஷ்
# சக்மா இன போராளிகள் தேர்தலைக் குழப்பத் திட்டம்

டாக்கா, மே 30

பங்களாதேஷில் சிட்டகாங் மலைப்பகுதியில் 16 ஆண்டுகளாக கெரில்லாப்போர் நடத்திவரும் சக்மா இன போராளிகள் டாக்கா அரச அப்பகுதியில் நடத்த உள்ள மாவட்ட சபைத் தேர்தல்களை குழப்பப் போவதாக அறிவித்துள்ளனர்.

வருகிற ஜூன் 25 இல் இத் தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன

சக்மா போராளிகள் தங்கள் பகுதிகளுக்குக் கூடுதல் சுயாட்சி கோரி ஆயுதக்கிளர்ச்சி நடத்தி வருகின்றனர். (எ)

## ராஜீவுக்கு பாராட்டு

சென்னை, மே 30

புதிதாக உருவான இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி, பிரதமர் ராஜீவ் காந்தியின் பஞ்சாயத்து ராஜ்ய சட்டத்தைப் பாராட்டியுள்ளது.

சேலத்தில் நடந்த நான்கு நாள் மாநாட்டில் இது சம்பந்தமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. [எ]

### முறைசாராக் கல்வி:
# பயிற்சிபெற்ற இடத்திலேயே 6 மாதங்கள் வேலை

யாழ்ப்பாணம், மே 31

பாடசாலைகளை விட்டு வெளியேறும் மாணவர்கள் முறைசாராக் கல்விப் பிரிவில் பயிற்சி பெற்று முடிந்தாலும் தொடர்ந்து ஆறு மாதங்கள் அப் பயிற்சி நிலையத்தில் வேலை செய்யலாம். அத்துடன் அவர்களுக்கு வேலைவாய்ப்பைத் தேட கல்வித் திணைக்களத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வழிகாட்டல் பிரிவு உதவும். இந் நடைமுறை இவ் வருடம் முதன் முதலாக நடைமுறைக்கு வருகிறது.

இத் தகவல்களை முறைசாராக் கல்வி அதிகாரி திரு. சபா சுப்பிரமணியம் வெளியிட்டார்.

யாழ். கல்வித்திணைக்களத்தில் முறைசாராக் கல்வியின் தொழில் நுட்பத் துறைக்கு பொறுப்பானவர் திரு. சபா சுப்பிரமணியம். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜி.சி.ஈ. (சாதாரண) பரீட்சையில் சித்தியடைந்த ஒரு சத வீதமானவர்கள் உயர்தர வகுப்புக்கும், பின் பல்கலைக் கழகமும் செல்கிறார்கள்.

ஆனால் மீதியான 99 சதவீத மாணவர்களின் நிலையைச் சிந்தித்தே முறைசாராக் கல்வித் திட்டத்தை நடைமுறைப் படுத்துகிறோம்.

இத்திட்டத்தில் கல்வி பெறுபவர்கள் தம் பயிற்சியை முடித்த பின்பு தொடர்ந்து ஆறு மாதங்கள் அப்பயிற்சி நிலையத்தில் வேலை செய்யலாம்.

அத்துடன் கல்விப் பகுதியினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள வழிகாட்டல் பிரிவின் உதவியுடன் வேலைவாய்ப்பையும் பெற முடியும்.

இப்படி அவர் கூறினார். (க-3)

# ஹாட்லிக் கல்லூரி ஞாபகார்த்த முத்திரை வெளியீடு ஜூன் 5 இல்

யாழ்ப்பாணம், மே 31

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி 150 ஆவது ஆண்டு நிறைவின் ஞாபகார்த்தமாக முத்திரை வெளியீடு எதிர்வரும் ஐந்தாம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

1838ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரியின் பொன் விழாவையொட்டி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையினால் இம்முத்திரை கொழும்பு தபால் தலைமையகத்தில் வைத்து வெளியிடப்படவிருக்கிறது. இம்முத்திரையின்பெறுமதி -/75சதமாகும்.

பொன்விழாவை யொட்டி எதிர்வரும் 11 ஆம் திகதி ஹோட்டல் தாஷ் சமுத்திராவில் இராப் போசன விருந்து இடம் பெறும். (இ-3)

## ஜலலபாத் மோதலில் 200 பேர் பலி!

காபூல் மே 30

ஜலலபாத்தில் நேற்று நடந்த மோதலில் காபூல் அரசுப் படைகள் 200க்கு அதிகமான கெரில்லாக்களைக் கொன்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இதே வேளை - கெரில்லாக்களின் தாக்குதலுக்கு இன்னும் நான்கு மாதங்களில் முடிவுகட்டப்படும் என்று காபூல் வெளியுறவு அமைச்சர் அப்துல் வாக்கில் சொன்னார். (எ)

## சூதாட்டக் கோஷ்டி

சாவகச்சேரி, மே 31

மட்டுவில் தெற்கில் சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஒரு கோஷ்டி சில இளைஞர்களால் அடித்து விரட்டப்பட்டது. [க-31]

## புனித அந்தோனியார் உற்சவம்

யாழ்ப்பாணம், மே 31

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் ஜூன் 4 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை நடைபெறும்.

முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது விழா. 4 ஆம் திகதி தொடக்கம் தினமும் நவநாள் ஆராதனைகளும் 12 ஆம் திகதி பி.ப. 6 மணிக்கு நற்கருணை பவனியும் ஆராதனையும் இடம் பெறும். அன்றைய ஆராதனைகளில் யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை கலந்து கொள்வார்.

13 ஆம் திகதி காலை மூன்று திருப்பலிப் பூசைகள் ஒப்புக் கொடுக்கப்படும். திருநாள் கூட்டுப் பலிப்பூசை 7 மணிக்கு நடைபெறும். பி. ப. 4.30 மணிக்கு புனிதரின் திருச்சுருப பவனியும் (தேர்பவனி) அதனைத் தொடர்ந்து இரவு 8 மணிக்கு ஆராதனையும் புனிதரின் ஆசிர்வாதமும் வழங்கப்படும். (க)

## நூல்வெளியீடு

யாழ்ப்பாணம், மே 31

மட்டுவில் ஆ. நடராசா எழுதிய சந்திரமௌலீசர் ஆலய வரலாறும் திருப்பதிகமும் என்ற நூலின் வெளியீட்டு விழா யூன் 3 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாசாலையில் நடைபெறும்.

கொடிகாமம் கொத்தணி அதிபர் திரு. ச. சின்னத்தம்பி தலைமை வகிக்கும் இவ்விழாவில் சந்திர மௌலீச வித்தியாசாலை அதிபர் திரு.சி. இராசசேகரம் வரவேற்புரையையும்' சந்திர மௌலீச ஆலய அர்ச்சகர் சிவஸ்ரீ அ. சிவசாமிக் குருக்கள் ஆசியுரையையும், புலவர் ம. பார்வதிநாதசிவம் வெளியீட்டுரையையும், பண்டிதர் செ. சிவலிங்கம் கலாநிதி நா. சுப்பிரமணியன் ஆய்வுரைகளையும் நிகழ்த்துவார்கள்.

திரு ச. நமசிவாயம், திரு சி. கந்தசுவாமி ஆகியோர் முதற்பிரதியைப் பெறுவார்கள். (க)

# குடும்பங்களின் பிரச்சினைகளே சமுதாயப் பிரச்சினைகளாகின்றன

### கருத்தரங்கில் வண பிதா உரை

யாழ்ப்பாணம், மே 31

''குடும்பங்களின் பிரச்சினைகளே சமுதாயப் பிரச்சினையாக உருவெடுக்கின்றன. ஆகவே குடும்பங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டால் சமுதாயப் பிரச்சினைகள் எழமாட்டா.''

இப்படிக் கூறினார் வண. பிதா எஸ். எம். செல்வரத்தினம்.

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள தொடர்பகத்தில் நடந்த இரு நாள் கருத்தரங்கில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

''விவாகம் செய்த கணவன் மனைவி உறவு நிலை'' என்னும் தலைப்பில் இடம் பெற்ற இக் கருத்தரங்கில் 25க்கு மேற்பட்ட குடும்பத்தவர்கள் கலந்துகொண்டனர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

குடும்பம் தான் சமுதாயத்தின் ஆணிவேர். கணவன் — மனைவிக்கு இடையில் ஏற்படும் உறவுகளில் காணப்படும் வேறுபாடுகள் பற்றியும் எவ்வகையில் அவற்றை இனங்கண்டு தீர்வு காண்பது என்பது பற்றியும் ஆராயவே இக் கருத்தரங்கு கூட்டப்படுகிறது.

கணவன் — மனைவி உறவுகள் எந்த வகையில் அமைந்தாலும் அவற்றுக்கான சரியான தீர்வு காணப்படவேண்டியது அவசியம்.

அவர்கள் உறவில் விரிசல் ஏற்பட்டால், அது அவர்களை மட்டுமல்ல முழுச் சமுதாயத்தையுமே பாதிக்கும்.

ஆகவே இருவருக்கும் இடையில் புரிந்துணர்வு வளர்க்கப்படவேண்டும். அப்போது தான் அவர்கள் சுமுகமாக வாழ்வதுடன் சமுதாயமும் சுமுகமாக வாழ முடியும்.

— இப்படி அவர் கூறினார்.

இக் கருத்தரங்கில் கலந்துரையாடல்களும் இடம்பெற்றன. (க-3)

## இலவச உணவுப் பொருள்

கிளிநொச்சி, மே 31

அண்மையில் கிளிநொச்சி பாரதிபுரத்தில் இடம்பெற்ற அசம்பாவிதத்தை தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளானவர்களுக்கு 200 ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்ட சர்வோதய நிலையம் இந்த உணவுப் பொருள்களை வழங்கி வருகின்றது.

சம்பந்தப்பட்டவர்கள் மருத்துவ அத்தாட்சிப் பத்திரம் காட்டி இந்த உதவிப் பொருள்களை பெற்றுக்கொள்ளலாம். இதுவரை 50 பேர் இந்த உதவியினை பெற்றுள்ளார்கள். (க-76)

### சமய சந்நிதிகளில்

## குருபூசை

யாழ்ப்பாணம், மே 31

பாதிப்புற்ற சிறுபிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட உரும்பராய் மேற்கு ஞானசம்பந்தர் இல்லத்தில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இல்லச் சிறுவர்களும் தர்மகர்த்தா சபை உறுப்பினர்களும் பூசையில் பங்குபற்றினர்கள்.

இல்லச் செயலாளர் திரு. செ. ஐயாத்துரை திருஞானசம்பந்தரைப் பற்றி உரையாற்றினார். (இ-ச)

## பொங்கல்

யாழ்ப்பாணம், மே 31

புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்தப் பொங்கல் எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற உள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை ஆலயபரிபாலன சபையினரும் வவுனியா வடக்கு உதவி அரசாங்க அதிபரும் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாலயத்தின் சார்பில் நிதிதிரட்டுவதற்குத் தாம் எவருக்கும் அனுமதி வழங்கவில்லை என்றும் போலிகளிடம் ஏமாற வேண்டாம் என்றும் ஆலய பரிபாலன சபைச் செயலாளர் தெரிவிக்கின்றார். (ச)

## உற்சவம்

சாவகச்சேரி மே 31

மட்டுவில் வடக்கு ஸ்ரீ மகாமுத்துமாரி அம்பாள் தேவஸ்தான அலங்கார உற்சவம் 26 ஆம் திகதி வெள்ளி முதல் ஆரம்பமாகி நடைபெறுகின்றது.

ஜூன் மாதம் 4 ஆம் திகதியுடன் நிறைவுபெறும். இந்த உற்சவங்களில் இலமுச சமயச் சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன. (ச-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
பூர்த்தி ஜுவல்லர்ஸ்

★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
நெக்கட்டிவ் [Processing] செய்தல் இலவசம்
★ விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள்
Kodak Fuji Konic.
Tudor Fort B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.



# உதயன்

31 - 05 - 1989 புதன்கிழமை



எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள்
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்


அமைச்சர் லலித்தின் பெயர் மாற்றங்கள்:

## பம்பாய் வெங்காயம் ஸ்ரீலங்கா பெரிய வெங்காயம் ஆனது

### மைசூர் பருப்பு செம்பருப்பாகும்

கொழும்பு, மே. 31

இனி 'பம்பாய் வெங்காயம்' ஸ்ரீலங்கா பெரியவெங்காயம் என்று அழைக்கப்படும்.

உணவு, விவசாய அமைச்சர் லலித் அத்துலத் முதலி இதனை நேற்று கொழும்பில் நடந்த விவசாயக் கூட்டம் ஒன்றில் வெளியிட்டார்.

பெரிய வெங்காயம் முதலில் பம்பாயிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. அதனால் பம்பாய் வெங்காயம் என அழைக்கப்பட்டது இப்போது இலங்கையில் பெரிய வெங்காயம் உற்பத்தி செய்யப்படுகிறது.

இனியும் பம்பாய் வெங்காயம் என்று அழைப்பது பொருத்தமாக இருக்குமா?

மைசூரில் இருந்து பருப்பு இறக்குமதி செய்யப்பட்டது. அதனால் அது மைசூர் பருப்பு என அழைக்கப்பட்டது.

இப்போது அப்பருப்பு துருக்கியில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. ஆகவே மைசூர் பருப்பு என்றதை நிறுத்தி அதனை 'செம்பருப்பு' என்று அழைப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்படி அமைச்சர் லலித் அத்துலத்முதலி சொன்னார். (ஒ-எ)

## கருணாநிதிக்கு கறுப்புக்கொடி காட்டத் திட்டமிட்டவர்கள் கைது

காஞ்சிபுரம், மே 31

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக எம். எல். ஏயான திரு. எஸ். டி. உக்கம்வந்த் உட்பட சிலர் நேற்று காஞ்சிபுரம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

நாளை வியாழக்கிழமை முதலமைச்சர் கருணாநிதி காஞ்சிபுரத்துக்கு விஜயம் செய்ய இருக்கிறார்.

அப்போது அவருக்கு கறுப்புக் கொடி காட்டுவதற்கு திரு. உக்கம்வந்த் தலைமையில் அ.தி.மு.க. தொண்டர்கள் திட்டமிட்டிருந்தனராம்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாவே இவர்கள் கைது செய்யப்பட்டனர். (ஒ-எ)

## அதிகாரப் பரவலாக்கல் முழுமையாக இடம்பெற்ற பின்பே அமைதிப்படை திரும்ப வேண்டும்

### சேலத்தில் நடந்த மாநாட்டில் தீர்மானம்

சேலம், மே 31

மாகாண சபை அதிகாரப் பரவலாக்கல் முழுமையாக இடம்பெற்ற பின்னரே இலங்கையில் இருந்து அமைதிப் படையைத் திரும்ப அழைக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்படிக் கூறும் தீர்மானம் ஒன்று சேலத்தில் நடந்த இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் நான்கு நாள் தேசிய மாநாட்டின் முடிவில் நிறைவேற்றப்பட்டது.

இம்மாநாட்டில் கலந்துகொண்ட பஞ்சாப்பைச் சேர்ந்த விடுதலைப் போராட்ட வீரர் வரதேஸ்வரன் மாரடைப்பினால் காலமானார். [ஆ-எ]

## யாழ். பல்கலைக்கழக நிதியத்துக்கு மேலும் 2 லட்சத்து 40ஆயிரம் ரூபா

### சிங்கப்பூரில் இருந்து அனுப்பப்பட்டது

யாழ்ப்பாணம், மே 31

யாழ் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள உப-வேந்தர் நல நிதியத்துக்கு சிங்கப்பூரில் இருந்து மேலும் இரண்டு லட்சத்து 40 ஆயிரம் ரூபா கிடைத்துள்ளது.

இந்நிதியத்துக்கு கடந்த வாரம் சிங்கப்பூரில் இருந்து மூன்று லட்சத்து 40 ஆயிரம் ரூபாவை அனந்தகிருஷ்ணன் என்பவர் அனுப்பி இருந்தது தெரிந்ததே.

யாழ் பல்கலைக்கழகத்தில் முன்பு கடமையாற்றிய பேராசிரியர் கனகசுந்தரம் அங்குள்ளவர்களிடம் பல்கலைக்கழக வளர்ச்சி குறித்து எடுத்துக் கூறி இவ்வுதவியை பெற்றுத் தந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந் நிதியத்துக்கு ஒருகோடி ரூபா வரையில் இது வரை கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)


★ எமது புதிய வெளியீடுகள் ★

1. கார்த்திக் — சோபனா நடித்த
காதல் கீதம்
(ஒறிஜினல்)

2. கார்த்திக் — நிரோஷா நடித்த
பாண்டி நாட்டு தங்கம்
(ஒறிஜினல்)

3. பிரபு — ராதிகா நடித்த
நினைவுச் சின்னம்
(ஒறிஜினல்)

வீடியோ விமல்
117, மானிப்பாய் வீதி,
ஐந்துசந்தி [மேல்மாடி]
யாழ்ப்பாணம். (11106)


# பிரேமா தரப்பு பூர்வாங்க ஆட்சேபனை நிராகரிப்பு

## முறையான விசாரணை 19இல் ஆரம்பம்

கொழும்பு, மே 31

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை மனு மீதான முறையான விசாரணை வருகிற ஜூன் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது.

திருமதி பண்டாரநாயக்கா தாக்கல் செய்துள்ள இந்த ஆட்சேபனை மனு சரியான முறையில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும்—

அதனால் மனுவை விசாரிக்காமலே தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கோரி ஜனாதிபதி பிரேமதாஸா தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனையை உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் நிராகரித்தது.

அதன் பின்னரே விசாரணைக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டது.

பிரதம நீதியரசர் பரிந்தா ரணசிங்க தலைமையிலான ஐந்து நீதியரசர் குழு ஆட்சேபனை மனுவை விசாரித்து வருகிறது.

பூர்வாங்க ஆட்சேபனையை விசாரித்த பின்னர் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கப்பட்டது.

கடந்த டிசம்பர் 19 ஆம் திகதி நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலில் திரு. பிரேமதாஸா தெரிவு செய்யப்பட்டதை செல்லுபடியாகாது என்று அறிவிக்கும்படி திருமதி பண்டாரநாயக்கா தனது மனுவில் கேட்டிருக்கிறார்.

வாக்களிப்பு நாட்டின் பல பகுதிகளில் சுதந்திரமான முறையில் நடத்தப்படவில்லை என்றும் திருமதி பண்டாரநாயக்கா காரணம் காட்டியிருக்கிறார்.

பூர்வாங்க ஆட்சேபனை சம்பந்தமான விசாரணையின் போது ஜனாதிபதி பிரேமதாஸா சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே. என். சொக்ஸியும் திருமதி பண்டாரநாயக்கா சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எச். எல், டி. சில்வாவும் ஆஜரானார்கள். (ஒ-எ)

## பாலத்தில் இருந்து குதித்து யானை தற்கொலை!

கௌஹாத்தி, மே. 30

யானை ஒன்று தற்கொலை செய்து கொண்டது.

இச் சம்பவம் அஸ்ஸாம் மாநிலத்தில் இடம் பெற்றது.

கௌஹாத்தி நகரின் வட பகுதியில் பிரமபுத்திரா நதி மீதாக கட்டப்பட்ட சரைஹாட் பாலம் உண்டு.

இந்த பாலம் கௌஹாத்தி நகரை இணைக்கிறது.

பூரண வளர்ச்சி அடைந்த யானை ஒன்று அந்தப் பாலத்தில் இருந்து பிரமபுத்திரா நதியில் பாய்ந்தது.

வன அதிகாரிகள் யானையின் உடலை பின்னர் ஹதிமுரா மலைப்பிரதேசத்தில் ஒதுங்கியிருக்கக் கண்டனர்.

யானையில் இருந்த இரண்டு தந்தங்களை வன இலாகா அதிகாரிகள் அகற்றி எடுத்தனர்.

ஒரு தந்தம் 27 கிலோ எடை கொண்டதாக இருந்தது. மற்றதின் எடை 11 கிலோவாகும். (எ)

### பரமேஸ்வரா சந்தியில் தொண்டர்படை முகாம்

யாழ்ப்பாணம், மே 31

யாழ் பலாலி வீதி பரமேஸ்வராச் சந்தியில் மக்கள் தொண்டர் படையின் முகாம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

முன்னர் அமைதிப்படையினர் நிலைகொண்டிருந்த இந்த இடத்தில் தற்பொழுது மக்கள் தொண்டர் படையினர் முகாமிட்டுள்ளனர். இந்த முகாமின் அருகே அமைதிப்படையினர் முகாம் ஒன்றும் இயங்கிவருகிறது.

இதே வேளை பலாலி வீதி – பரமேஸ்வரா சந்தி வீதியில் வேகத் தடைகளும் போடப்பட்டுள்ளன.

### மத்தியஅமைச்சர் வீர் பகதூர் சிங் காலமானார்

புதுடில்லி, மே 31

இந்திய மத்திய தகவல் அமைச்சர் திரு. வீர் பகதூர் சிங் (வயது 54) நேற்று காலமானார்,

உத்தியோக அலுவலாக பாரீஸ் சென்றிருந்த திரு வீர் பகதூர் சிங்குக்கு நேற்று முன்தினம் இரவு மாரடைப்பு எற்பட்டது.

உடனே பாரீஸில் உள்ள மருத்துவ மனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்று அவருக்கு மரணம் சம்பவித்தது.

மத்திய அமைச்சராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் இவர் உத்தரப்பிரதேச மாநில முதலமைச்சராக பணிபுரிந்து வந்தார். (ஒ-எ)

### விவசாயபீட விரிவுரையாளர் தெரிவானார்

யாழ்ப்பாணம், மே 31

யாழ் பல்கலைக்கழக விவசாய பீடத்துக்கு விரிவுரையாளர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியில் அமையவிருக்கும் விவசாயபீடத்துக்கான விரிவுரையாளரை தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சைகள் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

ஏழு பேர் தோற்றிய இந் நேர்முகப்பரீட்சையில் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டார். (ஒ-3)

### பிரான்ஸி--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறைப்படுத்திய பின்பே அவர்களைக் கட்டம் கட்டமாகத் திருப்பி அனுப்பப்பட வேண்டும்-என்று உள்ளது.

பிரெஞ்சு உதவியுடன் பொருளாதாரத் திட்டங்களை ஆரம்பிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் குறித்து யாழ்-பிரெஞ்சு நட்புறவுச் சங்கம் ஓர் அறிக்கையை தலைமையகத்துக்குச் சமர்ப்பித்துள்ளது.

யாழ்-பிரெஞ்சு நட்புறவுச் சங்கம், பிரெஞ்சு நாட்டில் உள்ளவர்களின் இங்குள்ள குடும்பங்களை அழைத்து நலன் புரிச் சங்கம் ஒன்றை அமைக்கவும், அவர்களில் பத்துப் பேரை (வயதானவர்களை) அழைத்துச் சென்று பிரெஞ்சு நாட்டில் உள்ள அவர்களின் பிள்ளைகளுடன் ஒரு மாதம் தங்கவைக்கவும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளதாக சங்கப் பிரதிநிதி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (அ-3)

### நீர்வேலி--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய இருவரும் மரணமானார்கள்.

இறந்த பெண்ணின் மகன் துஷ்யந்தன் (வயது 7), மற்றும் சிவகுமார் சோதிமலர் (வயது 25) ஆகியோர் காயமடைந்தனர்.

நாகரத்தினம் பூபாலசிங்கம் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு, இரவு 7 மணியளவில் மரணமானார்.

### வவுனியா--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றன.

கிளிநொச்சியிலும் ஹர்த்தால் முழு அளவில் நடந்ததாக இங்கு வந்த தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலும் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இரு மாவட்டங்களிலும் பஸ்கள் ஓடவில்லை என்றும் கடைகள், பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன என்றும் எமது மட்டக்களப்பு செய்தியாளர் அறிவித்தார். (அ-இ-164-31)

### மாணவன்-----

வருமாவார்.

கோப்பாய், நீர்வேலி, புத்தூர், ஆவரங்கால், வசாவிளான், அச்சுவேலி, இடைக்காடு, புன்னாலைக்கட்டுவன்பகுதிப் பாடசாலைகளிலேயே நான்குநாள் பகிஷ்கரிப்புக்கு முதலில் திட்டமிடப்பட்டுள்ளது.

உதயநாதசிவத்தைப்பற்றி அறிவதற்குப் பெற்றோர் எடுத்த முயற்சி எதுவும் பலனளிக்கவில்லை எனக் கூறப்படுகின்றது. [அ-11]

### தொண்டயாறு -----

கள்குழு ஊடாக அமைதிப் படையினரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

சம்பந்தப்பட்டவர் தெல்லிப்பளையில் உள்ள தமது அச்சகத்திலிருந்து மாலை வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருக்கையில் தெலிப்பளைச் சந்திக்கு அண்மையில்வைத்து கடத்திச் செல்லப்பட்டார் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-160)

### யாழ் குடாநாட்--

1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வங்கிகள் என்பனவும் இயங்கவில்லை. திரைப்படக் காட்சிகள் ரத்துச் செய்யப்பட்டன.

யாழ் நகரம் காலையிலிருந்தே மக்கள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் கிடக்கக் காணப்பட்டது.

யாழ் அரசினர் வைத்திய சாலை வெளிநோயாளர் பிரிவுக்கு நோயாளர் வருகையும் குறைந்திருந்தது.

வாகனப் போக்குவரத்து பாதிக்கப்பட்டதால் நேற்றுக் காலை பொதுமக்கள் பாதசாரிகளாக வீதிகளில் காணப்பட்டனர். (ஒ-3-9-51)

## 1990ஆம் வருடத்திற்குரிய மாணவர்அனுமதிமுறையில் மாற்றம் எதுவும் இருக்காது

கொழும்பு, மே. 31

1990 ஆம் ஆண்டில் பாடசாலைகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பதில் இப்போதுள்ள நடைமுறையே பின்பற்றப்படும். அதாவது 1989 ஆம் ஆண்டில் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறையே பின்பற்றப்படும். அதில் எதுவித மாற்றமும் இல்லை.

மாணவர் அனுமதி தொடர்பாக நாடாளுமன்ற உப கமிட்டி ஆராய்ந்து வருகிறது:

கமிட்டியின் தலைவரான துணைக் கல்வி அமைச்சர் திருமதி ரேணுகா ரணசிங்கா தலைமையில் கூடியபோது 1990 ஆம் ஆண்டில் மாணவர் அனுமதி முறையை மாற்றுவதில்லை என முடிவு செய்யப்பட்டது.

அடுத்த வருடத்தில் ஆண்டு ஒன்றில் மாணவர்களைச் சேர்ப்பதிலும் மாற்றம் எதுவும் செய்வதில்லை என்று உப கமிட்டி முடிவு செய்துள்ளதாம்.

நாடாளுமன்ற உப கமிட்டி மாணவர்களைப் பாடசாலைகளில் அனுமதிப்பது குறித்து தொடர்ந்து ஆலோசனைகளை நடத்தும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

### பெற்றோர் தின விழாவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், மே 31

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் 1988 ஆம் ஆண்டுக்குரிய பரிசளிப்பு விழாவும், பெற்றோர் தின விழாவும் இன்று புதன்கிழமை காலை நடைபெறுகிறது.

பாடசாலை அதிபர் திரு.மு. திருஞானசம்பந்தப்பிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாக்களில் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தியும் யாழ். இந்து மகளிர் [கொத்தணி] அதிபர் திருமதி எல். நாகராசா ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (அ-எ)

### மாநகரசபை கட்டடங்களும் தகர்ப்பு

யாழ்ப்பாணம், மே 31

சேதமடைந்த யாழ். மாநகர சபைக் கட்டடங்கள் நேற்றுக் காலை குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டன.

யாழ். மாநகரசபைக் கட்டடம் பல காலமாக சேதமடைந்த நிலையில் இருந்து வந்தன.

சேதமடைந்த பகுதிகள் நேற்று காலை முதல் அமைதிப் படையினரால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுத் துப்புரவு செய்யப்பட்டன.

### பனிப்புயலில் சிக்கி மரணம்

காத்மண்டு, மே. 30

எவரஸ்ட் சிகரத்தை அடைய முயற்சித்த மலையேறும் கோஷ்டியைச் சேர்ந்த 4 போலந்து பிரசைகளும் பனிப்புயலில் சிக்கி மரணமானார்கள்.

## யாழ். நூலகம் தீக்கிரையாகி நாளையுடன் வருடங்கள் எட்டு!

யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாணம் பொது நூலகம் தீக்கிரையாக்கப்பட்டு நாளை ஜூன் முதலாம் திகதியுடன் எட்டு வருடங்கள் முடிகின்றன.

1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1 ஆம் திகதி நள்ளிரவில் 97 ஆயிரம் புத்தகங்கள் உடையதும் தென் ஆசியாவில் மிகப் பெரிய நூல் நிலையங்களில் ஒன்றானதுமான யாழ்ப்பாணப் பொது நூலகம் சாம்பராக்கப்பட்டது.

இந்தச் செய்தி கேட்டு மொழியியல் வல்லுநரான தாவீது அடிகளார் அதிர்ச்சியினால் மூர்ச்சித்து மரணம் அடைந்தமை இந்த நிகழ்ச்சி எவ்வாறு மக்கள் மனங்களைப் பாதித்தது என்பதைப் பிரதிபலித்தது.

யாழ் பொது நூலகம் தீக்கிரையானது சம்பந்தமாக நியமிக்கப்பட்ட லயனல் பெர்னாண்டோ விசாரணைக் குழு பரிந்துரைத்தஒரு கோடி ரூபா நஷ்டஈட்டுத் தொகை இன்னும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பல்கலைக் கழக வேலைநிறுத்தம்:

## ஊழியர் தொழிற்சங்கக்குழு இன்று கொழும்புசெல்கிறது

யாழ்ப்பாணம், மே31

யாழ். பல்கலைக் கழக ஊழியர்களின் வேலை நிறுத்தம் தொடர்பான விவரங்களை அறிந்துகொள்ள தொழிற்சங்கத் தூதுக்குழு ஒன்று இன்று புதன்கிழமை கொழும்பு செல்ல இருக்கிறது,

கடந்த புதன்கிழமை முதல் யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் சம்பள உயர்வுகோரிவேலை நிறுத்தம் செய்துவருகிறார்கள்,

பல்கலைக்கழக ஊழியர்களின் சம்மேளனம் சம்பள உயர்வு சம்பந்தமாக மானிய ஆணைக்குழுச் செயலாளருடன் நடத்திய பேச்சுக்கள் பலன அளிக்காததால் வேலைநிறுத்தம் தொடர்வதாக தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. மானியக்குழு 350 ரூபா சம்பள உயர்வு வழங்க முன்வந்தபோதும் தொழிற்சங்கத்தினர் அதனை நிராகரித்து விட்டனர்.

யாழ். பல்கலைக்கழக ஊழியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கொண்ட குழு ஒன்று கொழும்புசென்று சம்மேளனப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தவிருக்கின்றது.

இவ்வேலைநிறுத்தால் பல்கலைக்கழக விரிவுரைகள் பாதிக்கப்பட்டுள்ளன, மாணவர்கள் வந்து திரும்பிச் செல்கிறார்கள். [ஒ-3]

## ஊழியர் வேலை நிறுத்தத்துக்கு நடவடிக்கைக் குழு ஆதரவு

யாழ்ப்பாணம், மே 31

யாழ். பல்கலைக்கழகத்தில் இடம் பெற்று வரும் ஊழியர்களின் வேலை நிறுத்தத்துக்கு பல்கலைக்கழக நடவடிக்கைக் குழு ஆதரவு தெரிவித்துள்ளது:

பல்கலைக்கழகத்தில் நடைபெறும் ஊழியர்களின் வேலை நிறுத்தம் நியாயமானதே என்று நேற்றுக் கூடிய பல்கலைக்கழக நடவடிக்கைக் குழு தீர்மானித்து ஆதரவு தெரிவித்துள்ளது: [ஒ-3]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினரால் [illegible] 361/2இல் உள்ள அச்சகத்தில் 31—05—1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org